RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/ irjt21s32

# நாலடியார் நட்பாராய்தல் அதிகாரத்தில் காணலாகும் உளவியல்

ஏ. கணபதி ராமன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்-608002, தமிழ்நாடு, இந்தியா

# Psychology Aspects in the Chapter Friendship in Naaladiyar's poem

**V. Ganapathy Raman [a, *]**

[a] Department of Tamil, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India

* Corresponding Author: ramanrevathy1998@gmail.com

Received: 18-03-2021
Revised: 27-08-2021
Accepted: 07-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Behaviour varies from human to human. A man or any other living being are judged based on behaviour. In that sense, literature is an explanation of human behaviour and their character. Literary works psychologically teaches us about how to make good friendship and whom to reject and accept. This article explores the psychological aspects in the chapter Friendship of Naaladiyar's poem.

**Keywords:** Naaladiyar, Human, Psychological Aspects, Teach

## முன்னுரை

நடத்தை என்பது மனிதனுக்கு மனிதன் மாறுபடுகின்ற ஒன்றாகும். நடத்தையைக் கொண்டே ஒரு மனிதன் அல்லது ஓர் உயிர் மதிப்பிடப்படுகின்றதைக் காணலாம். அந்த வகையில் இலக்கியங்கள் மனித நடத்தையை அவனது குணாதிசயத்தை அதாவது தன்மையை அறிந்து விளக்குவனவாக இருக்கின்றன. நட்புக்கொள்ளும்போது எத்தகைய தன்மை உடையவரிடம் நாம் நட்பு பாராட்ட வேண்டும், யாரைக் கடிந்து ஒதுக்க வேண்டும் என்பதை உளவியல் வாயிலாக இலக்கியங்கள் கற்றுத்தருகின்றன. நாலடியார் என்ற இலக்கியத்தில் வரும் நட்பாராய்தல் என்னும் பகுதியில் காணலாகும். உளவியல் கூறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## மனிதனும் மாண்புடைய வாழ்முறையும்

மனிதன் விலங்கிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதற்கு அவனது நடத்தையும் குணாதிசயங்களும் காரணிகளாக அமைந்தன எனலாம். எனவேதான் மனிதன் தன்னை இயற்கையோடு இணைத்துக்கொண்டாலும் விலங்கிலிருந்து வேறுபட்டவனாய் நாகரிக வளர்ச்சி பெற்றவனாய் வாழத்தலைப்பட்டான். இந்த வரலாற்றை அறிந்து கொள்வதுடன் தனிமனிதனது உளவியல் சிந்தனைகளைத் தெரிந்து கொள்வதும் நோக்கமாக இருக்கின்றது எனலாம். மன்னர்களது மனவியல் புலவர்- புரவலர் நட்பு வழியிலான உளவியல் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

தொடக்ககால மனிதன் தன்னுடைய வாழ்வியல் சிந்தனைகளுடன் உளவியலையும் அறிந்து கொண்டவனாகவே வாழ்ந்துள்ளான் எனலாம். அதாவது விலங்குகளை வேட்டையாடும்பொழுதும் தன்னை மீறிய இயற்கைச் சீற்றங்களைக் காணும்போதும் அச்சமே அவனது உளவியலின் தொடக்கமாக அமைந்து இருப்பதைக் காணலாம். தன் கருத்துக்களைப் பிறருக்கு ஒலிவடிவிலும் ஓவியமாகவும்

வரைந்து அறிவித்தான். இதனால் பிறரது எண்ணங்களை அறிந்து கொள்ள அது காரணமாக அமைந்தது எனலாம்.

விலங்குகளைப் போலச்செய்தலின் வழியாக உளவியல் செயல் வடிவமாக வளர்ந்ததை அறியலாம். விலங்குகளின் மன எண்ணங்கள் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் அறிந்து வைத்திருந்தான் எனலாம். இவ்விதமாகத் தொடக்கக்கால மனிதன் உளவியல் சிந்தனையோடு வாழ்ந்து வந்ததை அறிய முடிகின்றது. காலந்தோறும் தோன்றி வளர்ந்து வந்த உளவியல் என்னும் அறிவியல் மனித நடத்தைகளைப் பற்றிய கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சியாக இருப்பதைக் காணலாம்.

## உளவியல் என்பதன் விளக்கம்

உளவியல் என்பது இன்று நாம் காண்கின்ற பல்வேறு துறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றதாகும். மேலும் உளவியலானது அனைத்துத் துறைகளுடனும் இணைத்துப் பேசத்தொடங்கும் அளவுக்கு அதன் தேவை நன்கு உணரப்பட்டுள்ளதைக் காணலாம். இது குறித்துத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள உளவியல் என்ற நூலில் இதற்கான விளக்கம் தரப்படுகின்றதைக் காணலாம். அதாவது 'உளவியல் ஆங்கிலச் சொல்லாக phலஉhழடழபல என்ற சொல்லைக் கூறலாம். அதாவது மனிதனின் ஆழ்மனத்தோடும் அந்த ஆழ்மனத்தின் இயங்கு நிலையோடும் தொடர்புடைய ஒன்றாக உளவியல் காணப்படுகின்றது" என்று விளக்கம் தருகின்றதைக் காணலாம் (Karthika, 2017). மேலும் அந்நூல் தரும் விளக்கத்தை முன்வைக்கலாம். அதாவது 'உளவியல் என்ற சொல் கிரேக்கமொழியிலிருந்து வந்தது எனலாம். அதாவது சைக்கோ அல்லது ஆன்மா அதாவது ஆன்மா அல்லது மனச்செயல்பாடு என்று பொருள் தருகின்ற சொல்லாகும். எனவே உளவியல் என்பது ஆன்மாவைப் படிப்பது அல்லது ஆய்வு செய்வது என்று பொருள் தருவதாகும்" ன்று விளக்கம் தருகின்றதைக் காணமுடிகின்றது (Karthika, 2017). சமூகத்தில் இருந்தே இலக்கியம் உருவாகின்றது எனலாம். சமூக மனத்தின் ஆழ்நிலையில் கிடக்கின்ற மறைபொருளான உளச்சிக்கல்களைப் புனைவாக வெளிக்கொண்டு வரும் பணியையே இலக்கியங்கள் செய்கின்றன. அதுவே இலக்கியத்திற்கான இலக்கு என்றும் கொள்ளலாம்.

## இலக்கியமும் உளவியலும்

இலக்கியமும் உளவியலும் ஒன்றையொன்று நெருங்கிய தன்மை உடையனவாக இருப்பதைக் காணமுடிகின்றது. இலக்கியம் என்பது சமுதாயத்தின் நடத்தை முறைகளைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது எனலாம். மேலும் சமுதாய நடத்தை என்பது மனிதர் செயல்பாடுகளே எனலாம். நல்லவர் கெட்டவர் மேலவர் கீழவர் போன்ற பல்வேறு சிந்தனைகளை கருத்தியல்களைக் காட்சிப்படுத்தும் மனிதர்களை அவர்களது செயல்களைக் கொண்டு அளந்து உளவியல் முறையில் வெளிப்படுத்துவதாக இலக்கியம் அமைகிறது எனலாம். அந்தவகையில் தமிழிலக்கியங்களில் அக - புற - அற இலக்கியங்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றவை சமுதாயத்தின் சிக்கல்களை உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்த வகையில் நாலடியார் என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூலானது உளவியல் சிந்தனைகள் மிகுந்த நூலாக இருப்பதைக் காணமுடிகின்றது.

## நாலடியார் காட்டும் நட்பாராயும் உளவியல்

நட்புக் கொள்ளுதல் என்பது சமூகப் பழக்கங்களுள் ஒன்று. அதிலுங் குறிப்பாக உள்ளுணர்வு ஒன்றித்துக் கலந்த நிலையில் நட்பு பாராட்டுவதற்குச் சங்கஇலக்கியத்தில் புலவர் புரவலர்கள் பலரது நட்பினைச் சான்றுகாட்டலாம். நட்பின் எல்லையானது நண்பன் இறந்ததும் தானும் உயிர்துறக்கவேண்டும் என்னும் எண்ணம் தோன்றுவது ஆகும். பிசிராந்தையாருக்கு இருந்த இந்த நல்லுள்ளம் ஆராய்ந்து கிடைத்த நட்பினால் விளைந்ததே ஆகும். இதனை விளக்கும் விதமாகத்தான்

வள்ளுவப்பெருந்தகையும் கூட முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு என்று நட்பின் உண்மையான ஆழத்தைக் குறித்தும் அதன் உளவியல் தன்மை குறித்தும் கூறியுள்ளார்.

ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாலடியார் யானையுடனும் நாயுடனும் ஒப்பிட்டு விளக்குகின்றது. மேலும் நண்பர்களுடன் பழகும் விதத்தைக் கரும்பு தின்பதுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றதைக் காணமுடிகின்றது. ஏனெனனில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. அல்லது நல்ல நண்பர்களைத் தேர்வு செய்வதில் நாம் வெற்றி அடைதல் அவசியம் என்பதையும் இப்பாடல்கள் உளவியல்பூர்வமாக விளக்குகின்றன.

## யானை அனையர் நட்பு நாய்அனையர் நட்பு

யானை போன்ற பெருமையுடையார் நட்பை விலக்கி நாய் போன்ற இழிவுத்தன்மை உடையராயினும் அவரது நட்பை விரும்பிக்கொள்ளல் வேண்டும். ஏனெனில் யானை பலநாள் பழகியிருந்தும் சமயம் வாய்க்கும் போது பாகனையே கொல்லும் ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு எறிந்த வேலானது தனது உடலில் அழுந்திக் கிடக்க அவனைக் கண்டதும் வாலை ஆட்டிக்கொண்டு அவன் அருகே செல்லும். என்று விளக்கிக் கூறுகின்றது. இதன்வழியாக யானையின் உளவியலும் நாயின் நன்றியுடைய தன்மை என்னும் உளவியலும் இணைத்துக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

யானை என்பது பெருமையுடைய செயல்களைச் செய்யும் விலங்கு என்னும் சமூக உளவியல் யானையை மிக உயர்வான தெய்வ அம்சத்துடன் பொருத்திப் பார்க்கும் நிலையை வகுத்துள்ளதைக் காணலாம். ஆனாலும் அத்தனை பெருமை மிக்க யானையின் குணம் தான் அன்போடு பழகிய தன்னுடைய பாகனையே கொல்லும் தன்மை சமூகத்தினரால் தவறாகப் பார்க்கப்படுகின்றது. நாய் என்பது நன்றியுடையதாகவும் தன்னுடைய எஜமானருக்காகத் தன் உயிரையும் கொடுக்கக் கூடியது என்றும், வீட்டைக் காவல் காக்கும் பண்புடையது என்றும் பல்வேறு உயர்ந்த தன்மைகளைச் சமூகம் அதன் மீது ஏற்றி வைத்துள்ளதைக் காணலாம்.

## நடத்தை என்பதன் விளக்கம்

நடத்தை என்பதைக் கொண்டுதான் ஒரு மனிதன் மதிப்பீடு செய்யப்படுகின்றான். அவன் சூழலோடு இணைந்து பயணிக்கும் போது எவ்வாறு பழகுகின்றான். தன்னைப் பிறருக்கு எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்கின்றான் என்பதை வைத்துக்கொண்டுதான் மேலும் அவன் தீர்மானிக்கப்படுகின்றான். எனவே நடத்தை என்பது மனிதன் தன்னை அடையாளப்படுத்துவதற்கான ஒரு வாயில் என்று கருதலாம். விலங்குகளும் அவ்வாறே தன்னுடைய நடத்தையால் தான் முத்திரை குத்தப்படுகின்றன.

யானையிடம் சில நல்ல குணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. நாயிடம் சில கெட்ட குணங்கள் நடத்தையில் வெளிப்படத்தான் செய்கின்றன என்றாலும் இவற்றின் மீதான மதிப்பீடுகள் என்பவை அவற்றிடம் காணலாகும் மிகைநாடி மிக்க கொளல் என்னும் குறளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவையாகும்.

## விலங்கு நடத்தையும் - சமுதாய உளவியலும்

நடத்தைமுறை பற்றி ஆராய்வதே உளவியல் என அறிந்தோம். இந்நிலையில் மனிதனது நடத்தையை அறிந்து அதற்கான அறிவியல்பூர்வமான உண்மைகளை அறிந்து கொள்வதைப் போலவே விலங்குகளின் நடத்தையை அறிந்து அதன் செயல்பாடுகளை மனித நடத்தையுடன் பொருத்திப்பார்ப்பதை விலங்கு உளவியல் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். 'விலங்கு உளவியல் (யniஅயட pளலஉhழடழபல) என்பது விலங்குகளின் நடத்தையோடு மனிதனின் நடத்தையையும் ஒப்பிட்டுப் புரிந்து கொள்ள உதவும் பல்துறை சார்ந்த உளவியல் துறையாகும். இதன்

சொற்பிறப்பியல் அடிப்படையில் இதனை விளக்கவேண்டுமானால் மனிதனின் நடத்தையும் அவனது சமூகக் கட்டமைப்புகளும் உயிரின வாழ்சியல் கூறுகளோடு ஒப்பிட்டு ஆராயும் விலங்கின நடத்தையியல் பொதுவான மனிதனின் உளவியல் இயல்புகளோடு ஒப்பிட்டு அறியவும் இந்த உளவியல் பிரிவு பெரிதும் துணையாகின்றது (Psychology, 1978). மோர்கன் போன்ற நடத்தை ஆய்வாளர்கள் கூறுகின்ற விலங்கு உளவியல் மனிதனது நடத்தை மாற்றத்தை விலங்குகளின் செயல்பாடுகளுடன் பொருத்திப் பார்த்து அறிந்து கொள்வதாக அமைகின்றது.

பதினாறு பதினேழாம் நூற்றாண்டுவாக்கில் செய்யப்படுகின்ற இத்தகைய விலங்கியல் நடத்தை ஆராய்ச்சிகள் தமிழ் இலக்கியங்களில் முன்பே பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் விலங்குகளின் நடத்தையோடு மனித நடத்தையை ஒப்பிட்டு அறிந்து கொள்ளும் ஆராய்ச்சி முறைமையை முன்பே தமிழர் இனம் சமண சமயத்தவர்கள் பலரால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையே நாம் இங்கு அறிந்து கொள்ள வேண்டிய தகவலாக இருக்கின்றது. முறையாக உளவியல் குறித்து எந்தவிதமான முன்னெடுப்புகளும் தோன்றியிராத காலத்தில் விலங்கு உளவியலைத் தமிழர்கள் நாலடியார் வழியாகப் பேசுகின்றதைக் காணமுடிகின்றது.

## நாலடியார் காட்டும் இத்(ஐனு)

விலங்காக இருந்தாலும் மனிதனாக இருந்தாலும் மூளையில் செயல்படுகின்ற ஊக்கிகளே ஒரு மனிதனைத் தூண்டுகின்றன என்பது உளவியலின் வாதம். அதாவது 'ஒரு மனிதனை இயக்கிக் குறிப்பிட்ட வழியில் செயல்புரியச்செய்யும் நனவு நிலையைச் சார்ந்த உளநியதியை ஊக்கி எனக் கூறலாம். ஓர் உயிரின் நடத்தை இலக்கை நோக்கி மேற்கொள்ளப்படும் செயலாகும். ஊக்கிகள் என்பவை ஊக்குவித்தல் நடைபெறத்தூண்டும் காரணிகள் ஆகும்." என்று ஊக்கி என்னும் உளவியல் செயல்பாடு பற்றி விளக்குகிறார் (Karthika, 2017).

மனிதன் நட்புக்கொள்கின்ற போது அவன் நல்ல ஊக்கிகளால் நனவு நிலையில் செயல்படத் தூண்டுகின்ற மற்றொரு மனிதனிடம் நட்புக்கொள்ள வேண்டும். அவன் அடி மனமான இட் என்பதை அடக்கி ஆண்டு மேல் மனம் சொல்வதைச் செயல்படுத்தும் நாய் போன்ற நடத்தை உடையவனாக இருக்க வேண்டும் என்று விளக்குகின்றது. மேலும் தன்னுடைய இட் என்ற விலங்குமனத்தைச் செயல்படுத்த வாய்ப்பு கிடைத்தால் யானை போன்ற தன்மை உடையவர்கள் அதனைச் செயல்படுத்திவிடுவர். அதாவது தவறான ஊக்கிகளால் உந்தப்பட்டுவிடுவர். ஆனால் நாய் அப்படிப்பட்டதல்ல. நாய்போன்ற குணம் உடையவர்களும் அப்படிப்பட்ட தவறான ஊக்கிகளால் உந்தப்பட மாட்டார்கள் காரணம் அவர்கள் இத் என்ற விலங்கு மனத்தைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ளப் பழகியவர்கள் ஆவர். எனவே நட்பினை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டால் அது மிகுந்த பயனைத் தரும் என்கின்றது (Gowmareeswari, 2010).

சமுதாயத்தில் பலருடனும் தொடர்பு கொள்ளும் தனிமனிதன் தன்னுடைய செயல்பாடுகளால் பிறருடன் நெருங்கிப்பழகும் நிலைக்கு ஆளாகின்றான். அந்நிலையில் அவன் பழகுவதற்கு இனிய கரும்பு போல இனிக்கின்றான் என்கிறது நாலடியார். 'கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும் குருத்திற் கரும்புதின்றற்றே" நட்பு என்பது ஆராய்ந்து நல்ல ஊக்கிகளால் உந்தப்படுகின்றவர்களுடன் கொள்ளும் போது அவர்களைச் சந்தேகப்படவோ அவர்களிடமிருந்து விலக வேண்டும் என்ற எண்ணமோ தோன்றாது என்கின்றது நாலடியார் 'இற்பிறப்பு எண்ணி இடைதிரியார் என்பதோர் நற்புடை கொண்டமையல்லது" (Gowmareeswari, 2010).இவர் நமது நண்பர் இவர் சூழல் பாதித்தாலும் மனம்திரிந்து தவறான ஊக்கிகளால் இலக்கைவிட்டுச் செல்லமாட்டார் என்பதை அறியும் நம்பிக்கையை நடத்தை ஏற்படுத்தித் தருகின்றது என்பது நாலடியாரின் கருத்தாக அமைகின்றதைக் காணலாம். எனவேதான் மனப்பொருத்தம் உடையவரோடு மட்டுமே அறிவுடையார் சேர்ந்து இணைந்து இருப்பார்கள். ஏனெனில் இருவர்க்கு இடையிலும் நல்ல ஊக்கிகள் மட்டுமே உள்ளிருந்து அவர்களை இயக்கும். 'தம் நெஞசத்து யாத்தாரோடு யாத்த தொடர்பு" (Gowmareeswari, 2010).

## முடிவுரை

பழந்தமிழர் உள நிலையை நன்கு அறிந்து வைத்துள்ளனர். உள்ளத்தை ஆராய்ந்து நட்புக்கொள்ளத் தெரிந்து வைத்துள்ளனர். அதற்கான வழிமுறைகளையும் பிறர்க்கு அறிவுறுத்துகின்றனர். நடத்தை உளவியல் என்பதை விலங்குகளின் செயல்பாடுகளைக் கொண்டு உணர்த்திக்காட்டுகின்றனர். அடி மனத்தின் செயல்பாடுகளால் யானையைப் போல் உந்தப்படாமல் நாயைப்போல அடி மனத்தின் நினைவுகளும் சிந்தனைகளும் மேற்கிளம்பாமல் தடுத்து நிறுத்துகின்ற மேல்மனத்தின் செயல்பாடுகளைப் பின்பற்றும் மனிதர்கள் நட்புக்குச் சிறந்தவர்கள் என்கின்றது நாலடியார். மேலும் அவர்கள் தவறான ஊக்கிகளால் உந்தப்படாதவர்கள். மனமொத்து வாழக் கூடிய பண்பு கொண்டவர்கள். நன்றி அன்பு விசுவாசம் இரக்கம் கருணை முதலிய நல்லூக்கிகளால் இயக்கப்படுகின்றவர்கள். எனவே நட்புக் கரும்பு ஒன்றுதான். மனிதனும் ஒருவன்தான். இரண்டையும் எப்படிப்பட்ட செயலூக்கங்களால் நாம் பயன்படுத்திக்கொள்கின்றோமோ அதைப் பொருத்துத்தான் அவை நமக்கு அனுபவங்களைத் தரும் என்பதை முன்னரே தெரிந்து வைத்திருந்த சமணர்களும் தமிழர்களும் ஆழ்ந்த புலமை பெற்றவர்கள் என்பது நினைந்து புகழத்தக்கதாகும்.

## References


Gowmareeswari, S., (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Karthika, K., (2017) Ulaviyal nokkil Thirukural, Shanlax International Journal of Tamil Research, 2(5), 1-15.

Psychology, (1978) Class 11, Tamilnadu Textbook and Educational Services Corporation, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License